# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109498

1. District : மாவட்டம் திருச்சி PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 06 Date: நாள் 19.04.2023

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Act 1988 (as amended Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: in 2018) Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 17.04.2023 Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 11.00 Hrs Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.04.2023 Time : நேரம் 16.00 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக (கணினியால் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி —
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் வடக்கு 6 k.m.

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ப. வெங்கடேசன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கோவிந்தசாமி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 12.06.1978 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் வீடு கட்டுமான தொழில் (g) Address : முகவரி No. 16 D/57, நாட்டார் சந்து, பழைய கரூர் ரோடு, மேலச்சிந்தாமணி, திருச்சி-2

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. ராஜேஷ், AE, சிந்தாமணி பிரிவு, TANGEDCO, திருச்சி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

ஆதியால் தாமதம்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில்

இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

G. Vengatesan.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 19.04.2023
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் F. ...
Rank: நிலை ... No. எண் ..........

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.06/2023–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......**

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 19.04.2023 பணியில் இருந்த போது மாலை 16.00 மணியளவில் திருச்சி, மேலசிந்தாமணி, பழைய கருர் நாட்டார் சந்து எண்.16D/57, என்ற முகவரியில் வசித்து வரும் கோவிந்தசாமி மகன் வெங்கடேசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி, தென்னூர் EB அலுவலக சிந்தாமணிப்பிரிவில் AEயாக பணிபுரியும் திரு.ராஜேஷ் மற்றும் புகார்தாரர் திரு.வெங்கடேசன் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 19.04.2023 மாலை 18.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.06/2023 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)–ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் G.வெங்கடேசன், த/பெ கோவிந்தசாமி, நெம்பர்16D/57, நாட்டார் சந்து, பழைய கரூர்ரோடு, மேலச்சிந்தாமணி, திருச்சி–2. பெறுநர் உயர்திரு. காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருச்சி. ஐயா, நான், திருச்சி மேலச்சிந்தாமணி, பழைய கரூர்ரோடு, நாட்டார் சந்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் VR பில்டர்ஸ் என்ற பெயரில் வீடு கட்டுமானத் தொழில் செய்து வருகிறேன். எங்கள் பகுதியில் உள்ள காவேரி நகரில் வசிக்கும் திரு.பாலகிருஷ்ணன் என்பவர் எனக்கு நீண்ட கால நண்பர். அவருக்கு சொந்தமாக திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், கம்பரசம்பேட்டை ஜெயராம் நகரில் ப்ளாட் எண்.92 என்ற வீட்டுமனை இருந்தது. பாலகிருஷ்ணன் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான், அந்த இடத்தில் ஏற்கனவே இருந்த ஷெட்டிற்கு அவரது மனைவி திருமதி.கிருஷ்ணவேனி பெயரில் வீட்டு உபயோக மின் இணைப்பு பெற்றுக் கொடுத்திருந்தேன். அந்த ஷெட்டின் மின் இணைப்பு எண்.SC.No.06-207-001-3318. பின் பாலகிருஷ்ணன் அந்த ஷெட்டினை வணிகப்பயன்பாட்டிற்கு வாடகைக்கு விடலாம் என தீர்மானித்து, தற்போது இருக்கும் வீட்டு மின் இணைப்பினை (Domestic) வணிகப்பயன்பாட்டிற்கு (Commercial) மாற்றம் செய்து தருமாறு என்னிடம் கேட்டுக் கொண்டார். அதன்பேரில், Tariff change செய்வதற்கான விண்ணப்பத்தினை உரிய ஆவணங்களுடன் பாலகிருஷ்ணனின் மனைவி கிருஷ்ணவேனி பெயரில் தயார் செய்து கடந்த 2023 ஜனவரி மாதத்தில் சம்மந்தப்பட்ட தென்னூர் EB அலுவலகத்தில் உள்ள சிந்தாமணிப்பிரிவில் இருந்த Commercial Inspector ஜான்

என்பவரிடம் நேரிடையாக கொடுத்திருந்தேன். மனுவினை பெற்றுக்கொண்ட அவர் உங்கள் மனுவினை AE-க்கு put up பண்ணிடுவேன், நீங்கள் அழைக்கும்போது அலுவலகத்திற்கு வாருங்கள் என்று சொல்லியிருந்தார். அதன் பிறகு சில முறை நான் EB அலுவலகத்திற்கு சென்றபோதும் எனது மனுவின் நிலை குறித்தும் மேற்படி ஜான் எனக்கு சரியாக பதிலளிக்கவில்லை. இதனால் நான் கடந்த 17.4.2023 காலை சுமார் 11.00 மணியளவில் தென்னூர் EB அலுவலகத்தில் உள்ள சிந்தாமணிப்பிரிவிற்கு சென்றபோது அங்கிருந்த சிந்தாமணிப்பிரிவு AE திரு.ராஜேஷ் அவர்களை அவாது அறையில் சந்தித்து எனது மனுவின் நிலை பற்றிக்கேட்டேன். அதற்கு அவர் அங்கிருந்த CI ஜானை அழைத்து எனது மனுவினை அவரிடமிருந்து பெற்றுக் கொண்டு, ஜானை வெளியே போகச் சொல்லிவிட்டு என்னிடம், மனுவினை கொடுத்துவிட்டு என்ன வந்து பாக்காம இருந்தீங்கன்னா உங்களுக்கு தன்னால வேல முடிஞ்சிடுமா என்று கேட்டார். பின்னர், அவர் என்னிடம் கவர்மெண்ட் பீசா சுமார் ரூ.500/– கட்ட வேண்டியிருக்கும் என்று சொன்னார், அதற்கு நான் அவரிடம், அப்ளிகேசன் கொடுத்து மூனு மாசம் ஆகுது சார், ஷெட்டும் சும்மாவே பூட்டிக்கிடக்கு, வேலைய முடிச்சி கொடுங்க சார் என்று கேட்டேன். அதற்கு அவர், இருபதாயிரம் கொடுத்தீங்கன்னா உடனே உங்களுக்கு Tariff change பண்ணிடலாம் என்றார். அதற்கு நான் அவரிடம், பார்ட்டி நான் இல்ல சார், நான் காண்ட்ராக்டர்தான், இவ்ளோ பணத்த Owner கிட்ட கேக்க முடியாது கம்மியா சொல்லுங்க சார் என்றேன். அதற்கு அவர், இதுவே கம்மியாதான் கேட்டிருக்கேன், உங்களுக்காக அஞ்சு ரூவா கொறச்சிக்கிறேன், பதினஞ்சாயிரம் கொடுத்திடுங்க, இதுக்குமேல குறைக்க சொல்லாதீங்க, ரெண்டு நாள் local holiday அதனால வியாழக்கிழமை பணத்தோட வாங்க, நீங்க பணத்தோட என்ன வந்து பார்த்த பின் தான் ஆன்லைனில் பீஸ் கட்ட வேண்டியிருக்கும் என்று வற்புறுத்தினார். இது குறித்து நான் சரிங்க சார் Owner கிட்ட பணம் வாங்கிட்டு வந்து உங்களை பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். இந்த விசயத்தை பாலகிருஷ்ணிடம் தெரிவித்தேன். அதற்கு அவர், AE-க்கு லஞ்சம் கொடுக்க வேண்டாம், லஞ்ச ஒழிப்புத்துறைக்கு போய் உங்களிடம் லஞ்சம் கேட்ட AE மீது நடவடிக்கை எடுங்கள் என்று கூறிவிட்டார். என்னிடம் லஞ்சம் கேட்ட திருச்சி, தென்னூர் EB அலுவலக சிந்தாமணிப்பிரிவின் AE திரு.ராஜேஷ் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx (G.வெங்கடேசன்) 19.4.2023 Submitted to the Court of Hon,ble Special Judge, Special court for the Prevention of Corruption Act-1988, Trichy. Received this report at 16.00 hrs on 19.04.2023 and made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.06/2023 u/s 7(a) of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) at 18.00 hrs on 19.04.2023. Sd.xxx (F.Xavier Rani) 19.04.2023 Inspector of Police, V&AC, Trichy.

19/04/2023
(F. Xavier Rani)
Inspr. of Police
V&AC, Trichy